14.08.2024

O.S.No.184/2015

வா.சா.1.திரு.உடையப்பன் த.பெ.சண்முகம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6** முதல் **8** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1.** தாவா கோவில் மொத்தம் 7 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அந்த 7 ஏக்கர் நிலத்திற்குள்தான் தாவா பாறை உள்ளது என்றால் சரிதான், அது நீர்ப்பிடிப்பு பகுதி என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணத்தில் கதவு எண் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-2 தாவா சொத்திற்குரியது அல்ல என்றாலும், வேறு சொத்திற்குரிய ஆவணத்தினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா பிரச்சினை சம்பந்தமாக சமாதான கூட்டம் போடப்பட்டது என்றால் சரிதான். அதில் எங்கள் தரப்பும், எதிர் தரப்பும் ஆஜரானோம் என்றால் சரிதான். அந்த சமாதான கூட்டத்தில் பிரதிவாதிகளும், தாவா சொத்தில் அமைந்துள்ள கோவில் சாமிகும்பிட்டுக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, முடிவு எட்டப்படாமல் பிரதிவாதிகள் கலைந்து சென்று விட்டார்கள்.

2. கடந்த 13.01.2014ம் தேதி வட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் பிரதிவாதிகளும் தாவா சொத்தில் சாமி கும்பிட்டுக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது என்றாலும், நான் அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அந்த சமாதான கூட்டத்தில் வாதி, பிரதிவாதிகளையும் அதே போல் பிரதிவாதிகள், வாதிகளையும் தாவா சொத்தில் இடையுறு செய்யக்கூடாது என்று பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா கோவிலில் அனைத்து சமுதாய மக்களும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அருவாள், வேல்கம்புகள் வைத்து சாமிகும்பிட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. அட்டபட்டி கிராம மக்கள் அனைவரும் தாவா பாறையில் அருவாள், வேல்கம்பு வைத்து கோவிலாக 50 ஆண்டுகளுக்குமேலாக வணங்ககி வருகிறார்கள் என்றாலும், இந்த வழக்கிற்காக அதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து தற்போது வரை வருவாய் ஆவணங்களில் பொன்னாட்சிகுளம் என்றுதான் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அரசுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தினை முழுமையாக அபகரிக்க வேண்டி இந்த வழககினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பாறையில் யாரும் முழு உரிமை கொண்டாடமுடியாது என்றாலும், யார் வேண்டுமானாலும் அதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாவாவில்கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.